**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை

**<u>இடைநிலை மனு எண். 2/2022-ன் அசல் வழக்கு எண்.54/2016</u>**

1. லீலாகுமாரி
2. நாகராஜன் ..மனுதாரர்கள்/11,12 பிரதிவாதிகள்

/எதிர்/

1. வசந்தா
2. மலர்மண்ணன்
3. சந்திரசேகர்
4. சிலம்பரசன் .. எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு 09.01.2023 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/11,12 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கே. விஸ்வநாதன், அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ட்டி.ப்பி. சரவணன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டுக்கப்பட்டு, மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம்</u> :-**

மனுதாரர் இவ்வழக்கில் 11,12 பிரதிவாதிகளின் வழக்கறிஞர். வா.சா.1 குறுக்கு விசாரணை

செய்ய 04.11.2022 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் வழக்கிற்கு உண்டான சில முக்கிய ஆவணங்களை சேரிக்க 11, 12 பிரதிவாதிகள் சென்று வந்த காரணத்தினால் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போனது. தற்போதுதான் ஆவணங்களை தனது கட்சிக்காரர்கள் கொண்டுவந்து கொடுத்ததாகவும், மூத்த வழக்கறிஞர் வெளிநாடு சென்றுவிட்ட காரணத்தால் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போனது என்றும், எனவே வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய வா.சா.1 சாட்சியத்தை மீண்டும் அழைத்து உத்தரவிடுமாறு மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல்.

**3. <u>1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாராகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்</u>.**

(i). மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு பொய்யானது, சட்டப்படி செல்லக்கூடியது அல்ல. மனுதாரர் தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய 04.11.2021 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஏற்படையதாக அல்ல. இந்நீதிமன்றம் போதுமான அளவிற்கு கால அவகாசம் கொடுத்தும் வா.சா.1ஐ வேண்டுமென்றே குறுக்கு விசாரணை செய்யாமல் விட்டுவிட்டு தற்போது மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். எதிர்மனுதாரர்கள் / வாதிகளை அலைகழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடும் வழக்கினை முடிக்காமல் காலம் கடத்தி இழுத்தடிக்க வேண்டும் என்ற் கெட்ட நோக்கத்தோடும், தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். வா.சா.1ஐ மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 14.10.2022, 27.10.2022, 04.11.2022 ஆகிய தேதிகளி வாய்தா அளிக்கப்பட்ட பிறகும் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் விட்டுவிட்டு தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு இவ்வெதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர்களின் மனு எதிர்மனுதாரர்களின் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்?

5. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் வா.சா.1 சாட்சியானவரை மீண்டும் அழைத்து விசாரித்தால்தான் மனுதாரர்கள் தங்களுடைய வழக்கை நிரூபணம் செய்ய இயலும் என்றும், சில முக்கிய ஆவணங்கள் கிடைக்கப்பெறாததாலும், மூத்த வழக்கறிஞர் வெளிநாடு சென்றிருந்ததாலும், வா.சா.1ஐ உரிய நேரத்தில் விசாரிக்க இயலவில்லை என்றும், எனவே மனுதாரர் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளிக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், இல்லையேல் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும் எனவே இம்மனுவினை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

6. கற்றறிந்த எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், சில முக்கிய ஆவணங்கள் கிடைக்கப்பெறாததினாலும், மூத்த வழக்கறிஞர் வெளிநாடு சென்றுள்ளதாலும், உரிய நேரத்தில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்கும் நிலையில் இல்லை என்றும், இவ்வழக்கை காலம் தாழ்த்தவும், எதிர்மனுதாரர்களை அலைகழிக்கவும், தற்போது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

7. **தீர்வு :-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, மனு, எதிருரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர் இம்மனுவினை வா.சா.1ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டுமென்று தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் வா.சா.1ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

செய்யவில்லை என்றும், எனவே வா.சா.1ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க அனுமதியளிக்க வேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் வா.சா.1ஐ சில முக்கிய ஆவணங்கள் கிடைக்கப்பெறாததாலும் மூத்த வழக்கறிஞர் வெளிநாடு சென்றுவிட்ட காரணத்திற்காகவும், உரிய நேரத்தில் விசாரிக்க இயலவில்லை என்றும், வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டால்தான் மனுதாரர் தரப்பு வழக்கு முன்வைக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றும், எனவே இம்மனுவினை அனுமதிக்க வேண்டுமாறும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் உரிய நேரத்தில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் வழக்கை காலம் கடத்தவும், எதிர்மனுதாரர்களை அலைகழிக்கவும், இம்மனு தாக்கல் செய்துள்ளதாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது..

8. மேற்படி வழக்கு கோப்புகளை ஆராய்ந்ததில் வா.சா.1, மனுதாரர்கள்/11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாததாலும், இதர பிரதிவாதி குறுக்கு விசாரணை தொடர்ச்சியை மேற்கொள்ளாமலும் இருந்த நிலையில் வா.சா.1 சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் வா.சா.1 உரிய நேரத்தில் குறுக்கு விசாரணை செய்யப்படாததற்கு சில ஆவணங்கள் கிடைக்கவில்லை என்றும், மூத்த வழக்கறிஞர் வெளிநாடு சென்றிருந்ததாகவும் கூறப்பட்டிருக்கும் காரணங்கள் ஏற்கும் நிலையில் உள்ளது. மேலும் இம்மனு தள்ளுபடி செய்யும் பட்சத்தில் மனுதாரர்களுக்கே பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது, மாறாக இம்மனு அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு வழக்கில் ஒரு முழுமையான தீர்வு கிடைக்க ஏதுவாக இருக்கும், மேலும் மனுதாரர்களுக்கு வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய ஒரு வாய்ப்பு அளித்தால்தான் இவ்வழக்கினை இந்நீதிமன்றம் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் முறையான தீர்வு காண ஏதுவாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு நீதியின் நலன்பால் இம்மனு அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு பல வாய்ப்புக்கள் வழங்கப்பட்டும் உரிய நேரத்தில்

வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்றும் இதனால் எதிர்மனுதாரர்களுக்கு அலைகழிப்பு எற்பட்டுள்ளது என்று கூறுவது ஏற்கும் நிலையில் உள்ளது. எனவே இம்மனுவின் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு மனுவின் செலவுத் தொகையை செலுத்த கடமைப்பட்டவராகிறார்கள். எனவே மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/- செலவுத்தொகையாக செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

9. **முடிவாக,** இம்மனுதாரர்கள்/11, 12 பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ரூ.500/- எதிர்வரும் 20.01.2023 அன்றோ அதற்கு முன்பாகவே செலுத்த வேண்டும் என்றும், செலுத்த தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**

- இல்லை -

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**

- இல்லை -

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.